Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண் 49

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13 [illegible] |
| 6 மாதம் | 25-00 | [illegible] |
| 3 மாதம் | 13-00 | [illegible] |

மலர் 7 யாழ்ப்பாணம் குரோதி மாசி 23 ஆம் நாள் துல்க பிறை 2 (6-3-65) சனிக்கிழமை இதழ் 26

வடபகுதியில்

# சாரதி லைசன்ஸ் வழங்க மூவர் சபை

## மார்ச் 9-ம் திகதி முதல் செயல்பட ஆரம்பிக்கும்

## ஊழலை ஒழிக்க புதிய ஏற்பாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

வருகிற 9-ந் திகதி முதல் வடபகுதியில் சாரதி லைசன்ஸ் பெற விண்ணப்பிப்பவர்கள், மூவரடங்கிய ஒரு சபையினால் பரிசோதனை நடத்தப்பட்ட பின்பே லைசன்ஸ்களைப் பெற முடியும்.

இதுவரைமோட்டார்போக்குவரத்து பரிசோதகர் ஒருவரே அவர்களுக்கு டிரீட்சை நடத்தி, லைசன்ஸ் வழங்கி வந்தார். இனி மேற்கொள்ளவிருக்கும் புதிய முறையின் கீழ் மூவர் சபையில் ஒரு பொலிஸ் அதிகாரியும், மோட்டார் பரிசோதகர் ஒருவரும், காரியாதிகாரி ஒருவரும் இருப்பார்கள்.

இந்த முறை நாளடைவில் லஞ்ச ஊழல்களை ஒழிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மோட்டார் சாரதி லைசன்ஸ் பெறுவதற்கு விண்ணப்பசுகாரர் அந்தந்தப் பகுதி மோட்டார் பெரும்பாக அதிகாரிக்கும் கொழும்பு மாவட்டத்திலுள்ளவர்கள் கொழும்பிலுள்ள மோட்டார் போக்குவரத்து அதிகாரிக்கும் விண்ணப்பிக்கவேண்டும். இதுவரைகாலமும் சாரதி லைசன்ஸ் பெறுவோர் ஒரு பரிசோதகரினாலேயே சோதிக்கப்பட்டு வந்தனர். இந்த முறை சரியான தல்லவென்றும் வேறு முறைகளைக் கையாள வேண்டும் என்றும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் திரு. யு. பி. வீரசேகராவைத் தலைவராகவும், தொழில் இலாகா உதவி அதிகாரி திரு. இ. எஸ். அப்பாத்துரையை காரியதரிசியாகவும் கொண்ட ஒரு சபை இவ்விஷயத்தை பரிசீலனை செய்தது. ஆனால் திரு. யு. பி. வீரசேகராவின் அறிக்கை இன்னமும் வெளியிடப்படவில்லை.

அண்மையில் போக்குவரத்துப்பகுதியை பொறுப்பேற்ற அமைச்சர் திரு. அனில்முனசிங்கா சாரதி லைசன்ஸை ஒருவருக்கு வழங்குவதற்கு மூன்று அவர் பரிசோதகரால் மட்டும் சோதிக்கப்படாது பொது மக்களின் பிரதிநிதி ஒருவரும் இச்சோதனையின்போது பிரசன்னமாய் இருத்தல் வேண்டும் என்ற கருத்தை தெரிவித்திருந்தார். ஆனால் பொது ஜனப்பிரதிநிதிக்கு அரசாங்கத்தால் ஒருவித பண உதவியும் இல்லாததால் அச்சோதனையின்போது ஒருவரும் பிரசன்னமாய் இருக்க முன்வரவில்லை எனறு தெரியவருகிறது.

## தேசிய சுவீப் முடிவுகள்

நேற்று இழுக்கப்பட்ட 28 வது தேசிய சுவீப் சீட்டிழுப்பில் முதல் மூன்று பரிசுகள் பெறும் அதிர்ஷ்ட டிக்கட்டுகள் விபரம் வருமாறு:-

முதலாம் பரிசு
19 W 0923 ரூபா 50,000

இரண்டாம் பரிசு
01 L 0542 ரூபா 16,820

மூன்றும் பரிசு
03 R 0301 ரூபா 5,000

## நியூஸிலந்து 6 வி.க. 152 ரன்

கல்கத்தா, மார்ச் 5

இங்கு இந்தியாவுக்கும் நியூஸிலந்துக்குமிடையே இன்று ஆரம்பமான 2-வது கிரிக்கெட் டெஸ்டில் நியூஸிலந்து 6 விக்கெட் நஷ்டத்திற்கு 152 ரன்கள் எடுத்தது.

## சர்ஜோன் தலைமையில் டென்னிஸ்கோஷ்டி

### இன்று யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம், சனி

சேர் ஜோன் கொத்தலாவல இன்று விசேஷ விமானம் மூலம் யாழ்ப்பாணம் வந்துசேரவிருக்கிறார். இவரைத் தலைவராகக்கொண்ட இரத்மலானை விமானநிலைய ரெக்கிரியேஷன் கிளப்பைச் சேர்ந்த டெனிஸ் விளையாட்டுக் கோஷ்டியினரும் இங்கு வருவார்கள். இக்கோஷ்டியில் 10 பெண்கள் உட்பட 30 பேர் உள்ளனர்.

சேர் ஜோன் கொத்தலாவல தலைமையில் இங்கு வரும் டெனிஸ் கோஷ்டியினர் யாழ்ப்பாணம் கோட்டைக்கு அருகாமையிலுள்ள டெனிஸ் விளையாட்டு மைதானத்தில் மின்சாரவெளிச்சத்தில் யாழ்ப்பாணம் யுனைட்டெட் டெனிஸ் கிளப் யாழ்ப்பாணம் கோட்டை டெனிஸ் விளையாட்டுக்கிளப் ஆகிய கிளப்புகளின் கோஷ்டிகளுடன் விளையாடுவார்கள்.

இரத்மலானை விமானநிலைய ரெக்கிரியேஷன் கிளப் இங்கு யுனைட்டெட் டெனிஸ் கிளப் கோட்டை டெனிஸ் விளையாட்டுக் கிளப் ஆகியவற்றின் விருந்தினராக இங்கு தங்கியிருப்பர். இவர்கள் நாளை மாலை கொழும்பு திரும்புவர்.

## அமெரிக்காவில் இலங்கை பற்றியதிரைப்படம்

### 60 நகரங்களில் காட்டப்படும்

நியூயார்க், மார்ச் 5

இலங்கையின இயற்கை வனப்பையும், கலாச்சாரச் செல்வங்களையும்காட்டும் புதிய திரைப்படமொன்று அமெரிக்காவின் பல பாகங்களிலும் உள்ள சுமார் 60 நகரங்களில் 1965-ம், 1966-ம் வருடங்களில் காண்பிக்கப்படும்.

"செழிப்புள்ள இலங்கை" என்ற மகுடமிட்டுள்ள இத்திரைப்படம் அமெரிக்கப் புகைப்படக் கலைஞரும், எழுததாளரும், திரைப்பட வசன கர்த்தாவுமான ரால்ப் கேர்சல் என்பவரால் தயாரிக்கப்பட்டதாகும். திரு. கேர்சல் இலங்கையில் மூன்று மாத காலம் தங்கியிருந்து 9000 அடிகள் நீளமுள்ள 16 மிலிமீட்டர் கலர்ப்படத்தைத் தயாரித்தார் இது அவரின் சொந்த தனிப்பட்ட முயற்சியாகும்.

இத்திரைப்படத்தின் உலக முதல்காட்சி அடுத்த மாதம் நியூயார்க்கில் நடைபெறும், படம் காண்பிக்கப்படுகையில் திரு. கேர்சலின் வர்ணனைக் குரலும் ஒலிக்கும். பாடசாலைகளின் உபயோகத்திற்காக இப்படத்தின் சுருக்கமான க[illegible]

(6-ம் பக்கம் பார்க்க)

## உதவி மேயர் சமாதான நீதிபதி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் உதவி மேயர் திரு. கே. வ. ஜெயவேந்திரன இன்று சமாதான நீதிபதியாக மாவட்ட நீதிபதிமுன் விஸ்வாசப் பிரமாணம்செய்து கொண்டார்.

## கேரள தேர்தல் 9 முடிவுகள்

பத்திரிகை அச்சுக்குப் போகும்வரை வெளியான கேரள சட்டசபைத் தேர்தல் முடிவுகள் பின்வருமாறு:- மொத்தம் 9 முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

| | |
|---|---|
| மார்க்ஸிய கம்யூனிஸ்ட் | 2 |
| சம்யுக்த சோஷலிஸ்ட் | 2 |
| முஸ்லிம் லீக் | 1 |
| காங்கிரஸ் | 1 |
| கேரள காங்கிரஸ் | 1 |
| சுயேச்சை | 1 |
| சுதந்திரா | 1 |

மாபெரும் கூட்டம்

யாழ்ப்பாணத் தொகுதி தமிழரசுக் கட்சி அபேட்சகர்
திரு. சி. எக்ஸ். மாட்டின்
அவர்களை ஆதரித்து
இன்று சனிக்கிழமை
(6-3-65) மாலை 6-00மணிக்கு
கண்டிக்குளி நரிக்குண்டு விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.
தலைவர்:
திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கியூ. சி

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மரவகைகளும்
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்.
— விஷ்ணு —
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

### மணிவாக்கு

ஒருவன் உஹிம்ஸையில் தேர்ச்சி பெற்றுனுகில் மற்றக் குணங்கள் அவனிடம் தானுகவே வந்துவிடும். அவனுக்கு அளவற்ற அன்பும் பொறுமையுமுண்டு. அவனுக்குத் தீங்கிழைம்பாரை அவன் மன்னித்துவிடுவான்.

— சுவாமிசிவானந்தர்


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மாசி மீ 23 உ (6-3-65)


## மொழிப் பிரச்னை

இந்தியாவின் ராஜ்ய சபையிலே திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அண்ணுதுரையும் ஜனசங்கட்சித் தலைவர் ராஜபாயும் மொழிப் பிரச்னை விஷயமாக ஒருமனப்பட்ட கருத்தைத் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இது தென்கோடியும் வடகோடியும் சேர்ந்ததை ஒக்கும்.

இந்தியாவிலுள்ள 15 முக்கிய தேசிய மொழிகளையும் ஆட்சிமொழிகளாக்க வேண்டுமென்றும், அதுவரை ஆங்கிலம் தொடர்ந்து இருந்துவர வேண்டுமென்றும் திரு. அண்ணுதுரை கேட்டதை ஜனசங்க தலைவர் வரவேற்றுள்ளார். ஹிந்தியை நாடெங்கும் ஆட்சிமொழியாக்கி ஆங்கிலத்தை உடன் கைவிடவேண்டுமென்று வற்புறுத்தி வந்த (இந்தி வெறிக்) கட்சி இவ்விதம் மனமாற்றமடைந்துள்ளதைப் பார்க்கையில் அங்கு மொழிப் பிரச்னை சுமுகமாகத் தீரக்கூடிய புதிய நம்பிக்கை ஏற்படுவதாகவுள்ளது.

இந்தியாவைப் பிரிக்க வேண்டுமென்று தங்கள் கட்சி கேட்கவில்லை என்றும், ஒற்றுமை வேண்டுமென்பதை, ஒரேமாதிரி இருக்க வேண்டுமென்று குழப்பிக் கொள்ளக் கூடாதென்றும் மொழிப்பிரச்னையைத் தீர்க்க பலகட்சிகளுடனும் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்றும் தி. மு. க. தலைவர் அறிவுறுத்தியுள்ளார். மக்களின் உணர்ச்சிகளை உணர்ந்து, சகல மொழிகளையும் அரசாங்கம் கௌரவிக்க வேண்டுமென்று ஜனசங்கதலைவர் வற்புறுத்துகின்ருர்.

இந்நிலையில் அங்கு அரசாங்கக்கட்சி என்ன செய்யப் போகின்றதென்பதே கேள்வி. இந்தியை ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று அரசியல் அமைப்புச்சட்டம் கூறியதை சென்ற ஜனவரி 26-ந் திகதி அமுலுக்குக் கொண்டுவந்தனர். அதனுல் ஏற்பட்ட அனர்த்தங்களை விளக்கத் தேவையில்லை. இந்தி பேசாத ராஜ்யங்கள் விரும்பும்வரை ஆங்கிலத்தையும் ஆட்சிமொழியாக நீடிக்கலாமென்று காங்கிரஸ்கட்சி மொழிச்சட்டத்தை திருத்தத் தீர்மானித்துள்ளது. அது ஓரளவு வரவேற்கத் தக்கதேயென்றாலும் அந்த ஏற்பாட்டினுல் இந்தியைத்தவிர மற்ற தேசிய மொழிகளுக்கெல்லாம் சம அந்தஸ்து இல்லாது போவதாக இருக்கும்

பதினைந்து தேசிய மொழிகளையும் எப்படி ஆட்சிமொழிகளாக அங்கீகரித்து அமுலுக்குக் கொண்டு வர முடியுமென்றும் இது எப்படி அனுபவசாத்தியமாகுமென்றும் கேள்வி எழலாம். பல ராஜ்யங்களிலும் அம்மொழிகள் ஆட்சிமொருகளாக அங்கீகரிக்கப்படுகையில் மத்தியஅரசாங்கத்திலும் அவற்றை அங்கீகரிப்பது கஷ்டமல்ல என்று கூறுகிருர் ஜனசங் தலைவர் ஆங்கிலத்தை உடனடியாக விட்டு விட்டு மற்ற பதினைந்து மொழிகளையும் ஆட்சி மொழியாக்குவதாயின், நிர்வாக ஸ்தம்பித்துப் போகலாம். எப்படியும் இந்திவெறிபிடித்த ஒரு தீவிரவாதக்கட்சி, இப்போது மொழிப்பிரச்னை விஷயமாக மனம்மாறி, பதினைந்து மொழிகளையும் ஆட்சி மொழிகளாக அங்கீகரிக்க முன்வந்தது பெரிய காரியம். மக்களின் உணர்ச்சிகளுக்கு அரசாங்கம் கௌரவமளிக்க வேண்டும் என்று அவரும் கேட்பதால், இதுபற்றி காங்கிரஸ் அடியோடு புனராலோசனை செய்ய வேண்டிய அவசியமேற்பட்டுள்ளது

இது கட்சிப் பிரச்னையல்ல. தேசியப் பிரச்னை. ஆகவே எல்லாக்கட்சிப் பிரதிநிதிகளையும் அழைத்து இதற்கு சுமுகமான தேசிய தீர்வு காண வேண்டும். அதற்கான நல்ல சூழ்நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. மொழி வெறிக்கும், வீண்பிடிவாதங்களுக்கும் இடமில்லை. தேசிய நெருக்கடி ஏற்பட்டுள்ளதால், சீக்கிரத்தில் இப்பிரச்னைக்கு அங்கு நல்ல முடிவு ஏற்படுமென்றே நம்ப இடமுண்டு.

இந்தியா சிக்கலான இப்பிரச்னைக்கு இவ்வித தீர்வு காணுமாயின் அது இலங்கைக்கும் நல்ல வழிகாட்டியாக இருக்கும். இந்தியாவில் 15 முக்கிய மொழிகள் இருக்கையில் இங்கு இலங்கையிலே மூன்றே மூன்றுதான். அங்கு 15 மொழிகளையும் ஆட்சி மொழிகளாக்க முடியுமாயின், இங்கு மூன்று மொழிகளை அங்கீகரிப்பது மிகவும் சுலபமே. ஏற்கெனவே தமிழும் சிங்களமும் ஆட்சிமொழிகளாக இருக்க வேண்டுமென்பதை ஐக்கிய தேசியக்கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், இடதுசாரிக்கட்சிகளும் ஒப்புக்கொண்டிருந்தன இதை மாற்றியதால்தான் இலங்கை அரசியலும் குழம்பியது. இந்தியாவைப் பின்பற்றி, வீண் பிடிவாதம் காட்டாமல், ஆங்கிலம் உள்ளிட்டு மூன்று மொழிகளையும் ஆட்சிமொழிகளாக்கினுல் தான் இங்கும் இப்பிரச்னைகள் சுமுகமாகத் தீரவும் நாடு முன்னேறவும் முடியும்.

## அயூப் வஜ்பாய் வர்ணப்படம் தயார்

பீகிங், மார்ச் 6

பாகிஸ்தான் ஜனுதிபதி அயூப்கானின் சீன விஜயம் குறித்து வர்ணத்திரைப்படம் தயாரிக்கப் பட்டிருக்கிறதென்றும், விரைவில் அது பாகிஸ்தானுக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

# தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டவரின் நிலை

## இரண்டு வருடமாகியும் முடிவு தெரியவில்லை

பம்பலப்பிட்டி, வெள்ளி

லஞ்ச குற்றச்சாட்டுக்கள் தாக்கல் செய்யப்பட்டு சுமார் இரு வருடங்களுக்குமேல தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட அரசாங்க சேவை ஊழியர்களுக்கு இதுவரை குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டு தண்டனை வழங்கப்படவுமில்லை குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுதலை வழங்கப்படவுமில்லை என உத்தியோக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

லஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் கொண்டுவரப்பட்ட திருத்தங்களை அரசாங்கம் நிறைவேற்றத் தவறியதாலேயே இவ்வித நிலை எழுந்துள்ளதாக லஞ்சக் குற்றச்சாட்டு ஆணையாளரின் இலாகாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த இருவருடங்களாக இத் திருத்தங்கள் செய்வதற்காக ஜனப்பிரதிநிதிகள் சபை நிழ்ச்சிநிரலில் இதுவிஷயம் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் இதற்கு முதலிடம் கொடுக்கப்படாத காரணத்தினுல் இத்திருத்தங்களைக் கொண்டு வரமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியருக்குக் கடிதம்

## நன்மதிப்பற்ற வாக்குறுதிகள்

தாங்கள் பாராளுமன்றம் சென்று இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்குள் தமிழ்மக்களின் பிரச்னைகளுக்கு சிங்கள மக்களால் ஒரு தீர்வு காண முடியாவிட்டால் தாங்கள் பதவியில் நின்றும் ராஜினுமா செய்துவிடுவதென்று எதிர் வரும் தேர்தலில் போட்டியிடும் திரு. ஜி ஜி. பொன்னம்பலம் உட்பட பல அபேட்சகர்கள் கூறியிருப்பதாகத் தெரியவருகிறது. இப்படியான ஒருவாக்குறுதி இந்த நேரத்தில் தேவையற்றதும் நன்மதிப்பற்றதும் ஆகும். இப்படியான வாக்குறுதியை திரும்பவும் பரிசீலனை செய்வது சிறந்தது. இன்றைய சூழ்நிலையிலே தமிழ் மக்களினுடைய நிலைமையை சீர்திருத்துவதற்கு இரண்டு பாராளுமன்றங்களின் கால எல்லை அல்லது பத்துவருடங்கள் வேண்டும். பாராளுமன்ற ஸ்தானங்களை ராஜினுமா செய்வது தமிழ்மக்களின் உரிமைகளை பாதுகாக்கக்கூடிய -பயன் விளையத்தக்க செடலாகாது. எங்கள் மதிப்பிற்குரிய தலைவரும், முதியவருமான திரு. சுந்தரலிங்கம் இந்த முறையில் வெற்றி காணவில்லை என்பது தெளிவு. இதனுல் நான் ஒருவரையும் தனிப்பட்ட முறையில் இழிவுபடுத்திப் பேசவில்லை, ஆனுல் நான் கூறும் முறை முழுமையானது. நாங்கள் மூன்று வருடத்திற்கு பின்னர் செய்யவேண்டிய விஷயம்மூன்றுவருடமுடிந்தபின்னர் தீர்மானிக்கப்படவேண்டுமேயல்லாது தற்பொழுதல்ல.

எஸ். சிவசுப்பிரமணியம்.
கொழும்பு 12.

## சமய குரவர் குருபூசை தேவை

கோப்பாய், வெள்ளி

"நாஸ்திகம் பரவும் இந்நேரத்திலே அதை அகற்றி, இறைவழிதனில் மக்களைக் கொண்டு செலுத்துவது வருங்கால வாலிப மாணவர்களின் கையிலேயே தங்கியுள்ளது. சமயகுரவர் குருபூசை, இன்னும் அவை போன்ற விழாக்களை நாம் பக்திசிரத்தையோடு கொண்டாடவேண்டும். கற்றறிந்தோரினது சிறு உபந்நியாசங்களும் இந்நேரங்களிலும் மற்றும் ஏனைய நேரங்களிலும் இடம்பெறவேண்டும் என அச்சுவேலி சரஸ்பதி வித்தியாலயத்தில் நடைபெற்ற சிவராத்திரி விழாவின்போது திரு. க. வீரகத்தி கூறினுர்.

## "தமிழரின் தொழில்வாய்ப்பு குறைந்துவிட்டது" — ஜி. ஜி.

வவுனியா, வெள்ளி

"சுதந்திரம் பெறுமுன் தமிழ் பேசும் மக்களிடம் இருந்து வந்த 70 சதவிகித தொழில் வாய்ப்புகளை இன்றுவரை 40 சதவிகிதத்துக்கு குறைத்துவைத்ததும், தமிழ்பேசும் மக்களின் பரம்பரைப் பூமியான திருகோணமலை, அம்பாறை, கல்லோயா, வவுனியா போன்ற தமிழ் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றம் பெருகவிட்டதும் தன்மானத்துடன் இதுவரை வாழ்ந்து வந்த தமிழ்பேசும் மக்களை தம் சொந்தநாட்டில் இரண்டாம்தரப் பிரஜைகள் ஆக்கியதையும் தவிர வேறு எதையும் தமிழரசுக்கட்சி சாதிக்கவில்லை" என தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி ஜி. பொன்னம்பலம் வவுனியா முற்றவெளி மைதானத்தில் நகரசபைத் தலைவர் திரு. எம். பொன்னையா தலைமையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசியபோது கூறினுர்.

திரு த. சிவசிதம்பரத்தை ஆதரித்து கூட்டம் நடைபெற்றது.

## நாடகமன்றக் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணை கலைவாணர் நாடகமன்றப்பொதுக்கூட்டம் பெரியபுலம் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்கள்: டாக்டர் எஸ். சிவஞானசுந்தரம் (நந்தி), திரு கே. எஸ். திரவியம், யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர், யாழ். நகரமேயர், யாழ். பொலிஸ் சுப்பிரின்டன், தலைவர் திரு. வி. ஏரம்பமூர்த்தி. உபதலைவர்கள் சங்கீத பூஷணம் திரு. எஸ். பாலங்கம், திரு. கி. பாண்டித்துரை. இணைக்காரியதரிசிகள்: திருவாளர்கள் ஆர். ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி, கே. பாலசிங்கம் தனுதிகாரி: திரு. பி. நிக்கலஸ, திருவாளர்கள் எஸ். டி. அரசு, இரா. பற்குணம், கே. சுந்தரலிங்கம், மு. தியாகராசா, சங்கீதபூஷணம் பி. இளயதம்பி ஆகியோர் நிர்வாகசபை அங்கத்தவர்களாக தெரிவுசெய்யப்பட்டனர். திருவாளர்கள் எஸ், டி. அரசு கே. என். கணபதிப்பிள்ளை ஆகியோர் இணை இயக்குனர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## விளையாட்டுக்கழகம்

சாவகச்சேரி, மார்ச் 5

சமீபத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட சாவகச்சேரி மத்திய விளையாட்டுக் கழக நிர்வாகிகள் பின்வருமாறு:-

போஷகர்: திரு ஆர். ஞானப்பிரகாசம, தலைவர்: திரு. என். பரமசாமி, உப-தலைவர்: திரு. வி. மகாதேவன், பொதுச் செயலாளர்: திரு. எஸ். எஸ். தருமலிங்கம், உபசெயலாளர்: திரு. எஸ். சிதம்பரப்பிள்ளை, பொருளாளர். திரு. வி. சதானந்தன்.

## ஐயாறன் எழுதுவது

வண்ணை சிவன்கோவில் திருவிழா இப்போது சிறப்பாக நடந்துவருகிறது. இரவிலே சுவாமி பலபல வாகனங்களில் பவனிவந்து அழகான காட்சி அளிக்கின்ருர், முன்பெல்லாம் சுவாமி பவனியுடன் நூற்றுக்கணக்கான மக்களும் பக்தியுடன் வருவராம் இப்போது ஐம்பதுகூட இல்லையென்று ஓரன்பர் குறைபட்டார். பாவம், அவரவர்களுக்கு என்ன ஜோலியோ!

என்ருலும் ஊர்வலத்தில் அதிகமான மக்கள் பக்தியுடன் கலந்துகொண்டால் தான் லட்சணம். சுவாமியுடன் பவனி வருவதே ஒரு பெரிய பாக்கியமாகும். திருவிழாவுக்காகக் காப்புக் கட்டிவிட்டால் கொடி இறக்கும்வரை யாரும் அந்த ஊரைவிட்டே வெளியே செல்லப்படாதென்று ஒரு நியதியுமுண்டு. திருவிழாக் காலத்தில் ஊர் மக்களை தெய்வத்தின் பெயரால் ஒற்றுமைப்படுத்தி வரமுடிந்தது. ஆனுல் அதெல்லாம் இந்தக் காலத்தில் நடக்கக்கூடியதா? மக்களைக் கூட்டுவதற்காக நான்கு ஜதை நாகஸ்வரம், சின்ன மேளம் முதலியவற்றுக்கு சில இடங்களில் ஏற்பாடு செய்கிருர்கள். ஆங்காங்கே பிரசாதங்கள் வழங்குவதாயின் கூட்டம் அதிகமாக வரலாம்!

கூட்டம் அதிகமாக வந்தாலும் சில இடங்களில் சுவாமி காவுவதற்கே ஆட்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறதாம். தெய்வ நம்பிக்கையும் பக்தியும் உண்மையில் வளருவதாயின் இந்தப் பிரச்னை தானுக மறைந்துவிடும்.

* * *

ஊர்வலத்தில் மக்கள் அதிகம் வராவிடினும் தினசரி பொலிசார் வருகிருர்களாம். அவர்கள் தலையில் தொப்பி, காலில் பூட்ஸ் இவற்றுடன் வருவது தெய்வத்தை அவமதிப்பதாக இருப்பதாயும் நல்லூரிலே திருவிழாவின்போது சுவாமியுடன் வரும் பொலிசார் தொப்பி, பூட்ஸ் இவற்றை அகற்றிவிட்டே வருவரென்றும் இங்கும் அவ்விதமே ஏன் செய்யக்கூடாதென்றும் கேட்கின்ருர் அதே அன்பர்.

கோவில் திருவிழாக்களில் கூட்டம் அதிகமாக இருப்பினும் தொண்டர் படைகளே கூடுமானவரை பொலிசின் உதவியின்றி ஒழுங்கை நிலைநாட்டுவதுதான் நல்லது, கூட்டம் மிகக் குறைவாக இருக்கும்போதும் பொலிஸ் உதவி அவசியந்தானு? அப்படி அவசியமாயின் அவர்கள் காலில் ஒன்றும் போடாமல் தலையிலும் தொப்பி வைக்காமல் மக்களின் உணர்ச்சிக்கு மதிப்பளித்து மரியாதையாக வருவதே முறை. இவ்வித ஆலயக்கடமைகளுக்கு சைவப் பொலிசாரை நியமிப்பது நல்லது ஆனுல் யாழ்ப்பாணத்திலே சைவ, தமிழப் பொலிசார் இரண்டொருவர் உண்டா என்பது சந்தேகம், மற்றப் பொலிசாருக்கு விஷயத்தை விளக்கினுல் அவர்கள் அதற்கிணங்க நடக்கக்கூடும். எப்படியும் ஒழுங்கை நிலைநாட்டுவதாகக் கூறி மக்களின் மனதைப் பொலிசார் புண்படுத்துவது எவ்விதத்திலும் தகாது. தொண்டர்படை ஏற்பட்டால் இந்தப் பிரச்னையே இல்லாது போகும். பொலிசாரை வீணுக ஏன் தொந்தரவு செய்யவேண்டும்?

* * *

சச்சியேகம்பனேயென்றேன் நானே கயிலாய காரோணு என்றேன் நானே, நிச்சல மணுளனே யென்றேன் நானே நினைப்பார் மனத்துளா யென்றேன் நானே, உச்சம் போதே றேறீ யென்றேன் நானே உள்குவார் உள்ளத்தா யென்றேன் நானே, அச்சம் பிணிதீர்க்கும் ஐயாறன்னே யென்றென்றே நானரற்றி நைகின்றேனே.

— அப்பர் சுவாமிகள்.

வியட்நாம் எதிரொலி

# மாஸ்கோவில் அமெரிக்க தூதராலயம் இரண்டாம் முறையாக தாக்கப்பட்டது

## ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க துருப்புக்கள் அழைக்கப்பட்டன

### பலருக்கு காயம்

### "அமெரிக்கா வாபஸ் பெறும்வரை சண்டை நிற்காது"

—சீன எச்சரிக்கை

வாஷிங்டன், மார்ச் 5

**மாஸ்கோவிலுள்ள அமெரிக்கத் தூதராலயம் நேற்று இரண்டாம் முறையாக கற்களால் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டது குறித்து அமெரிக்கா, ரஷ்யாவுக்குக் கடும் ஆட்சேபணையைத் தெரிவித்திருக்கிறது. தாக்குதல்பற்றி வருந்துவதாயும் சேதத்திற்கு நஷ்டஈடு வழங்கப்படும் என்றும் ரஷ்யா அமெரிக்காவிடம் தெரிவித்திருக்கிறது.**

நேற்று மாஸ்கோவில் சீன மாணவர்களும், வியட்நாம் மாணவர்களும் அமெரிக்கத் தூதராலயத்தைக் கற்களால் தாக்கிச் சேதப்படுத்தினர் என்றும் இதன் காரணமாகப் பலர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க துருப்புகள் அழைக்கப்பட்டன. அமெரிக்கா வடவியட்நாம் மீது தாக்குதல் நடத்தியதை ஆட்சேபிக்குமுகமாக இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

பாரிசிலும் அமெரிக்க விரோத ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

**ரஷ்யா, சீனு எச்சரிக்கை**

வியட்நாமில் அமெரிக்கா திட்டமிட்டு ஆக்கிரமிப்பு நடத்தி வருவதாயும், தென்கிழக்காசியாவில் போரைவிஸ்தரிக்க அது முயல்வதாயும் விளைவுகளுக்கு அமெரிக்காதான் பொறுப்பு என்றும் ரஷ்யா எச்சரித்திருக்கிறது. ஆனால் அமெரிக்கா இந்த ஆட்சேபனையை நிராகரித்து, வடவியட்நாம்தான் ஆக்கிரமிப்பு நடத்தியிருப்பதாகப் பதில் குற்றம்சாட்டியது.

நேற்று பீகிங்கில் வெளியான சீன அறிக்கை ஒன்றில் வியட்நாமில் அமெரிக்கத் தாக்குதலைச் சமாளிக்க சீனமக்கள் நல்ல ஆயத்தமாய் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. ரஷ்யாவின் எச்சரிக்கை வெளியான சிலமணி நேரத்தில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

ஆனால் வடவியட்நாமுக்கு சீனு எந்தவகையில் உதவுகிறது என்பது அறிவிக்கப்படவில்லை. அமெரிக்கத் துருப்புகள் வியட்நாமிலிருந்து வெளியேறும் வரை தெற்கே சண்டை நிற்காது என்றும் சீனு கூறியிருக்கிறது.

**முறியடிக்க வேண்டும்**

அதேசமயம் வாஷிங்டனில் வெளிநாட்டுமந்திரி திரு. ரஸ்க் விடுத்த அறிக்கையில் வடவியட்நாமின் ஆக்கிரமிப்பு முறியடிக்கப்படுவது அமெரிக்காவுக்கு முக்கிய விஷயம் எனக் கூறியிருக்கிறார்.

இதற்கிடையில் மாஸ்கோவில் அமெரிக்கத் தூதராலயம் இரண்டாம் முறை தாக்கப்பட்டது குறித்து ஜனாதிபதி ஜோன்ஸன் திரு ரஸ்குடன் ஆலோசனை நடத்தியிருக்கிறார்.

**கொரில்லாக்கள் பலி**

நேற்று வியட்நாமில் கொரில்லாக்கள் குவிந்திருக்கும் இலக்கு ஒன்றின்மீது ஆறுவது நாளாக அமெரிக்க ஹெலிகோப்டர்கள் தாக்குதல் நடத்தியபோது நிலத்திலிருந்து அவை சுடப்பட்டன. ஹெலிகோப்டர்கள் திருப்பிச் சுட்டதால் ஏராளமான கொரில்லாக்கள் கொல்லப்பட்டதாய் அறிவிக்கப்படுகிறது.

சென்ற மாதச் சண்டையில் 870 தென்வியட்நாம் துருப்புகள் கொல்லப்பட்டதாயும், 1450 பேர் காணப்படவில்லை என்றும் 1800 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

**யுதாண்டுடன் சந்திப்பு**

நியூயோர்க்கிலுள்ள யூகோஸ்லேவிய ஸ்தானிகர் ஐ. நா. காரியதரிசி யுதாண்டைச் சந்தித்து ஜனாதிபதி ஜோன்ஸனுக்கும், திரு சாஸ்திரிக்கும் வியட்நாம் விஷயமாக ஜனாதிபதி டிட்டோ அனுப்பிய குறிப்பைக் கையளித்தார். மண்டலசார்பற்ற நாடுகள் வியட்நாம் பிரச்னையைத் தீர்க்க கூட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அந்த யோசனை கூறுகிறது.

வடவியட்நாம் ஜெனிவா ஒப்பந்தத்தை மீறி வருகிறது என தென்வியட்நாம் குற்றஞ்சாட்டியிருக்கிறது.

வியட்நாம் பிரச்னைக்குபேச்சுவார்த்தைமூலம் அமைதித் தீர்வுகாண வேண்டும் என பெல்ஜிய அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

யூகோ அரசாங்கம் வியட்நாம்பற்றி ஐக்கியஅராபியக் குடியரசு, அல்ஜீரியா ஆகிய நாடுகளுடன் தொடர்புகொண்டிருக்கிறது.

**எம். பிக்கள் மகஜர்**

45 பிரிட்டிஷ் தொழிற் கட்சி எம். பி.க்கள் கையெழுத்திட்டு அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் வியட்நாம் விஷயத்தில் அமெரிக்காவுடன் தோளோடுதோள் சேர்ந்து நிற்குமாறு கேட்டிருக்கிறார்கள்.

## கேரள தேர்தலில் 67சத விகிதத்தினர் வாக்களிப்பு

திருவனந்தபுரம், மார்ச், 5

நேற்று நடைபெற்ற கேரள பொதுத் தேர்தலில் 67 சதவிகித வாக்காளர்கள் வாக்களித்ததாக அறிவிக்கப்பட்டது.

ஆலப்புழையைச் சேர்ந்த ஆரூரில் 90 சத விகிதமும், கோழிக்கோடு மாஞ்சேரியில் 40 சத விகிதமும் வாக்களிக்கப்பட்டது. எர்ணாகுளத்தில் 70 சத விகிதத்தினரும், கோழிக்கோட்டில் 67 சத விகிதத்தினரும், கொல்லத்தில் 70 சத விகிதத்தினம் திருச்சூர், திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் 65 சதவிகிதத்தினரும், பாலக்காட்டில் 56 சதவிகிதத்தினரும் வாக்களித்தனர்.

கிரிக்கெட்

## ஆஸ்திரேலியா 9—211

கிங்ஸ்டன், மார்ச் 5

ஆஸ்திரேலியாவுக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்குமிடையே இங்கு நடைபெற்றுவரும் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா தன் முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட் நஷ்டத்திற்கு 211 ரன்கள் எடுத்தது. மேற்கிந்தியக் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 239 ரன்கள் எடுத்திருக்கிறது.

## அலுவலகத்தில் குழந்தை வளர்ப்பு

மூனிச், மார்ச், 6

மேற்கு ஜெர்மனியில் தொழில் நிறுவனங்களிலும், கம்பெனிகளிலும் வேலைபார்க்கும் பெண்கள் இனிமேல் தங்கள் குழந்தைகளையும் உடன் அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லலாம். ஜெர்மனியில் வேலைக்கு ஆள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. பல பெண்கள் குழந்தைகள் பிறந்தவுடன் வேலைக்குச் செல்லுவதில்லை. குழந்தைகளைப் பராமரிக்க வசதி செய்து கொடுத்தால் பெண்கள் வேலைக்கு வரலாமென்று ஒரு தொழில் நிறுவனத்திற்கு நூதன ஆலோசனை தோன்றிறது. "பெண்களே! வேலைக்கு வாருங்கள்! உங்கள் குழந்தைகளையும் உடன் அழைத்து வாருங்கள்" என்று விளம்பரம் கொடுத்தார்கள். நிறையப் பெண்கள் வேலைக்கு வந்தார்கள். அவர்களின் குழந்தைகளைப் பராமரிப்பதற்குத் தனி விடுதியும் அலுவலர்களும அமர்த்தப்பட்டனர். இதனால் பெண்கள் குழந்தைகளைப்பற்றிக் கவலையின்றி வேலைபார்க்கிறார்கள். இதே முறையை இப்போது மற்ற நிறுவனங்களும் கையாண்டு வருகிறார்கள்.

## அரசாங்க விளம்பரங்கள்

புதுடில்லி, மார்ச் 5

இதுவரை ஆங்கிலப் பத்திரிகைகளுக்குமட்டும் கொடுக்கப்பட்டுவந்த யூனியன் அரசாங்கசேவை விளம்பரங்கள் 40 பாரதமொழி பத்திரிகைகளுக்கும் கொடுக்கப்பட்டு வருவதாக ஸ்ரீமதி இந்திரா காந்தி கூறினார்.

## அயூப்கான்

டாக்கா, மார்ச் 5

சீனுவுக்கு விஜயம் செய்திருக்கும் பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் வருகிறசெவ்வாய்க்கிழமை டாக்கா திரும்புவார்.

இந்தோனேஷியாவில்

## "எல்லா நூல் நிலையங்களையும் மூடிவிட்டுத் திரும்புக"

### அமெரிக்கா நடவடிக்கை

ஜாகர்த்தா, மார்ச், 5

இந்தோனேஷியாவிலுள்ள சகல அமெரிக்க நூல்நிலையங்களையும், வாசகசாலைகளையும் மூடிவிட்டு, அங்குள்ள ஊழியர்களைத் தாயகம் திரும்புமாறு அமெரிக்கா கேட்டிருக்கிறது. இந்த நிலையங்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு வருவதே இதற்குக் காரணம் என அறிவிக்கபபட்டது.

மேற்கு ஜாவாவிலுள்ள அமெரிக்க டயர் தொழிற்சாலை ஒன்றை இந்தோனேஷிய அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாயும், வியட்நாமில் அமெரிக்க தாக்குதலை எதிர்க்குமுகமாகவே அமெரிக்க ரப்பர்தோட்டங்களும், டயர் தொழிற்சாலையும் எடுக்கப்பட்டன என்றும் அரசாங்கம் அறிவிப்பு கூறிறது.

இதற்கிடையில் கம்போடியாவுக்கு 4 நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி சுகர்ணே இந்தோனேஷியா திரும்பியிருக்கிறார்.

## "மகத்தான சமுதாய மாற்றம்" பற்றி திரு. லிப்மன்

### ஐ. நா. வில் உரை

நியூயோர்க். மார்ச் 5

சமாதானத்தை அடையவும் வறுமையை வெற்றி கொள்ளவும் நம்பிக்கையூட்டிக்கொண்டு இப்போது முன்னேறிவரும் மகத்தான சமுதாய மாற்றத்தை தன்னோடு ஐக்கியப்படுத்திக் கொள்ள வேண்டுமென பிரபல அமெரிக்க பத்திரிகை எழுத்தாளரான வால்ட்டர் லிப்மன் ஐ. நா. சபையைக் கேட்டுக் கொண்டார்.

சமாதானத்தையும் உறுதிப்பாட்டையும் நிலைநாட்ட இம்மாபெரும் சமுதாய மாற்றத்தையே நாம் நம்பியிருக்க வேண்டும். அப்போதுதான் சர்வ வியாபக சமுதாயம் செழிப்படையும்.

"மகத்தான சமுதாய மாற்றம் மனித சூழ்நிலையில் ஒரு பரிபூரண மாற்றமாகும். இது மனித அறிவு வளர்ச்சியின், உலகவாழ்க்கையின்லோகாயத சூழ்நிலைகளை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்ற ஞானத்தின் ஒரு விளைவே" என்று கூறினார்.

சர்வதேசக் கூட்டுறவு வருடத்தை அங்குரார்ப்பணஞ் செய்யும் முகமா ஐ. நா பொதுச்சபையில் ஏற்பாடு செய்திருந்த தொடர்ச்சியான பல சொற்பொழிவுகளில் திரு லிப்மன் கடைசிச் சொற்பொழிவையாற்றினார். ஐரோப்பா, ஆசியா, இலத்தீன அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மறறும் பலரும் சொற்பொழிவாற்றினர்கள்.

காலஞ்சென்ற பாரதப் பிரதமர் திரு. ஜவஹர்லால் நேருவே சர்வதேசக் கூட்டுறவுக்கென ஒரு வருடத்தை இவ்வாறு ஒதுக்கவேண்டுமென்ற கருத்தை முதன்முதலாக வெளியிட்டார். அக்கருத்தை ஐ. நா. பொதுச் சபை அங்கீகரித்து 1965-ம் ஆண்டை சர்வதேசக் கூட்டுறவு வருடமெனக் கொண்டாட வேண்டுமென முடிவுசெய்தது.

"மனிதருள் ஏழை முதல் பணக்காரர் வரையுள்ள யாவரும் தங்கள் வாழ்க்கைப் பிரச்னைக்கு நம்பிக்கை ஒளியூட்டும் இம்மகத்தான சமுதாய மாற்றம் எப்போது வருமென எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்," என்றும் திரு. லிப்மன் கூறினர்.

"வறுமையை வெற்றிகொள்ள முடியுமென்றே, அல்லது சமுதாய சமாதானத்தை யடைய முடியுமென்றே இதற்கு முன் மனிதன் நம்பவில்லை ஆனால் இன்று இராஜ தந்திரிகளுக்கு இதுவே அன்றாட சாதியப்பாடுள்ள இலட்சியமாயிருந்து வருகிறது" என்று அவர்மேலும் தொடர்ந்து கூறினர்.

## 35,000 வியட்காங் கொரில்லாக்கள் நாசவேலை

### பாதுகாப்புசபைக்கு அமெரிக்கா அறிக்கை

வாஷிங்டன், மார்ச் 5

வியட்நாம்பற்றிய புதிய அமெரிக்க அறிக்கையொன்றை அமெரிக்க வெளிநாட்டு இலாகா ஐ. நா. பாதுகாப்பு சபைக்கும், வாஷிங்டனிலுள்ள சகல வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

தென்வியட்நாமுக்கு எதிரான ஆக்கிரமிப்புக்கு ஆதரவாக வட வியட்நாம் பெருமளவான நடவடிக்கைகள் எடுத்து வருவதாக அது கூறுகிறது.

"வடவியட்நாமிலிருந்து தெற்கிலுள்ள வியட்கொங் படைகளுக்கு ஆயுதங்களும், வெடிமருந்துகளும் விநியோகிக்கப்படுவருவதுடன் வியட்நாம் இராணுவ உத்தியோகத்தர்கள் படிப்படியாகத் தென்வியட்நாமிற்குள் ஊடுருவி, வியட்கொங் கொரில்லாப்படைகளுக்குத் தலைமைவகித்துவருகின்றனர்.

தென்வியட்நாம் கம்யூனிஸ்ட் அரசியல் நிறுவனங்கள் எனப்படும் ஸ்தாபனங்கள் வடக்கிலேயுள்ள கம்யூனிஸ்ட் ஆதரவாளர்களோடுதொடர்புகொண்டுள்ளன. இதுசம்பந்தமான தகவல்கள் திடுக்கிடும் தன்மை உடையன. வடக்கிலும் தெற்கிலும் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் உண்மையில் ஒரே கட்சியே. அவை ஒன்றாகவே இயங்குகின்றன" என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## 11 மெஜாரிட்டி

லண்டன், மார்ச். 5

பிரிட்டனின் பாதுகாப்பு சம்பந்தமாக பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் ஏற்பட்ட விவாதத்தின்போது நடைபெற்ற வாக்கெடுப்பில் அரசாங்கத்துக்கு 11 அதிகப்படி மெஜாரிட்டி கிடைத்தது.

# என். எம். முக்கு கறுப்புக்கொடி காட்டுவதேன்?

## திரு. அமிர்தலிங்கம் விளக்கம்

உடுப்பிட்டி, வெள்ளி

"தமிழ்த் தொழிலாளர்கள் மொழிவழி பிரிந்து இயங்க வேண்டுமென்பதே எமது சங்கத்தின் கொள்கையாகும் தமிழினத்தைச் சிங்கள இனம் அடக்கி ஆண்டதாக இலங்கை வரலாறு கூறும் மகாவம்சத்திலே கூட கிடையாது. 1956ம் ஆண்டு 24 மணிநேரத்திலே தனிச்சிங்களச்சட்டம் கொண்டு வருவேன் என்று கூறிக் காலஞ்சென்ற பண்டாரநாயக்கா பிரதமரானபோது தமிழரசுக்கட்சி காலிமுகத்திலே சத்தியாக்கிரகம் செய்து அவரது தனிச்சிங்கள சட்ட அமுலைத் தடைசெய்தது தமிழரசுக் கட்சியினரின் கொள்கையை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. எங்கள் கொள்கையை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்." இவ்வாறு அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு கோடீஸ்வரன் மந்திகை அம்மன் கோவிலடியில் உடுப்பிட்டித் தொகுதி கள்ளுத்தொழிலாளர் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

மேலும் அவர் தொடர்ந்து கூறியதாவது-

அரசாங்கம் தமிழ்மக்களுக்கு நீதிவழங்குமென்று பிரதமர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார், அரசாங்கம் பொதுமக்களுக்கு வாக்குறுதியளிக்க முடியாது. எதையும் சட்டமாகவே இயற்றவேண்டும் சிங்களம் படித்தாலும் தமிழ் அரசாங்க ஊழியர்கள் இனிமேல் மதிக்கப்படமாட்டார்கள். தனிச் சிங்களச் சட்டத்தினுல் 1965 ஜூன் முதலாம் தேதி வேலையை விட்டு விலகக்கூடிய நிலையில் நம்மில் பலர் இருக்கிறோம். அரசாங்கம் எம்மை வேலையை விட்டு விலக்கினாலும் உரிமைக்காக நாம் போராடியே தீருவோம். பொருளாதாரம் குன்றினாலும் உரிமைதான் முக்கியம்

இலங்கைத் தொழிலாளர் கழக இணைப் பொருளாளர் திரு சிவானந்தசுந்தரம் பேசுகையில் தொழிலாளி வர்க்கம் சிங்களத் தலைவர்களின் கையில் சிக்கியுள்ளவரையில் தமிழ்பேசும் இனத்திற்கு விடுதலையில்லை. சில காலங்கள் வரையில் வகுப்புவாதக் கட்சியாகக் காணப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இன்று முற்போக்கு கட்சியென்று தன்னைக் கூறிக்கொள்கிறது. கொழும்புத் துறை நாவாய் ஓட்டும் தொழிலாளர் சமூகச் சார்பில் அவர்களது அறிக்கையொன்றைத் தமிழிலும் வெளியிடவேண்டுமென்ற கோரிக்கையைத் திரு. அனில் முனசிங்காவிடம் சமர்ப்பித்தபோது இது ஒரு பாரதூரமான வேண்டுகோள். இதற்குச்செவிமடுத்தால் தமிழ் மக்களுக்கு உரிமைகொடுத்துவிட்டதாக என்னைக் குறை கூறுவார்கள் என்று கூறி மழுப்பிவிட்டார். மாணவர்களின் அறிமுக அட்டைகள் முன்பு மூன்று மொழிகளிலும் வந்தன. சமீபத்தில் தனிச் சிங்களத்தில் மாத்திரம் வழங்கப்பட்டதை நாம் எதிர்த்தபோது நிதியமைச்சர் டாக்டர் என் எம். பெரேரா அதை ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மாத்திரம் அச்சடித்தால் போதுமென்று கூறினார். இவர்கள் தான் இங்கே வந்து தமிழர்களுக்கு உரிமை கொடுப்பதாகக் கூறித்திரிகிறார்கள். இவர்களுக்கு நாம் கறுப்புக்கொடி காட்டும் சமயத்தில் சிவப்புக்கொடி காட்டவும் பலர் முன்வருகிறார்களென்பது வெட்கக்கேடான செயல். இன்று இலங்கை முழுவதும் 5,000 பஸ்கள் போக்குவரத்தில் உள்ளன. இவற்றில் 3,500 லீலெண்ட்ஸ் உள்ள பஸ்கள். இவற்றில் 700 அல்லது 800 ஆங்கில ஐ. வி இலக்க பஸ்கள் உள்ளன. இந்த ஐ. வி. பஸ்கள் இருக்கத்தக்கதாகத் தமிழ்மக்களின் உரிமைகளை முறியடிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்திற்காகவே சிங்கள ஸ்ரீ பஸ்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டன. இதைத் தமிழரசுக்கட்சி எதிர்த்தது தவறு?

வட்டுக்கோட்டைத் தமிழரசு வேட்பாளர் திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் "ஐரிஷ் விடுதலைப் போரில் தொழிற்சங்கவாதிகள் கையாண்ட முறைகளையே நாமும் கையாள வேண்டும். ஓரினம் இன்னோர் இனத்தை அடிமைப்படுத்துவது சோஷலிசமல்ல. அத்தகைய அரசாங்கம் முற்போக்கு அரசாங்கமுமல்ல. திரு. என். எம். பெரேராவுடன் திரு. திருச்செல்வம் பேச்சுவார்த்தை நடத்தியபோது நாம் ஒருமித்து அரசாங்கத்தை வீழ்த்திவிட்டதாக இங்குவந்த நண்பர்கள் லெஸ்லி குணவர்த்தன ஆகியோர் கூறினராம். கூட்டரசாங்கம் ஏற்படுவதற்கு முன்னரேயே திரு. திருச்செல்வத்துடன் டாக்டர் என். எம். பெரேரா பேச்சுவார்த்தை நடத்தினரென்றும் அதன்பின்னர் எப்போதாவது இதுபற்றித் தமிழரசுக் கட்சியுடனே அல்லது திருச்செல்வத்துடனே பேச்சுவார்த்தை நடத்தவில்லையென்பதையும் கூறவிரும்புகிறேன். சமஅந்தஸ்து என்று கூறிக்கொண்டு தமிழ்மக்களை ஏமாற்றியமைக்காகவும் தமிழ் அரசாங்க ஊழியர் திரு. கோடீஸ்வரனின் வழக்குத் தீர்ப்பை அமுலுக்குக்கொண்டு வரத் தடையாக இருந்ததனாலும் திரு. என். எம். பெரேராவுக்கு நாம் கறுப்புக்கொடி காட்டுவதெனத் தீர்மானித்திருக்கிறோம். தமிழினத்தின் உரிமைக்குப் பங்கம் விளைவிக்கும் எவரையும் நாம் அவமதித்தே தீருவோம்" என்று கூறினார்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திருவாளர்கள் பிரான்சிஸ் பெரேரா, நடராசா, ச. புவிராஜசிங்கம், வழக்கறிஞர் செல்லையா ஆகியோருட்படப் பலர் பேசினர்.

இவ்வங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு உடுப்பிட்டித் தொகுதி தமிழரசு வேட்பாளர் திரு. க. ஜெயக்கொடி தலைமை வகித்தார்.

# 'விலை உயர்வுக்கு பதுக்கலே காரணம்'

அம்பலாங்கொடை, வெள்ளி

'விலைவாசிகள் உயர்வு என யு. என்' பி. யினர் கூறிவருகின்றனர். முதலாளிமார்கள் பொருள்களைப் பதுக்கிவைப்பதாலேயே இவ்வித விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.,

இவ்வாறு பொரளைத் தொகுதியில் சமசமாஜக் கட்சி சார்பில் போட்டியிடும் திருமதி விவியன் குணவர்த்தன மாவனல்லை தொகுதியில் சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிடும் திரு. பி ஆர். ரத்னாயக்காவை ஆதரிக்குமுகமாக நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்வித பதுக்கலைத் தடுக்க நீதி மந்திரி கண்காணிப்பு கமிட்டிகளை நியமிக்கவிருக்கிறார் என அவர் மேலும் பேசுகையில் கூறினார்.

# 35,000 வியட்காங்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

"தெற்கில் வியட்கொங் கொரில்லாக்களின் பயங்கர நடவடிக்கைகள் நாட்டின் நாலாபாகங்களுக்கும் விஸ்தரிக்கப்படுகின்றன. பொது மக்கள், கொலை, தூக்கிச் செல்லப்படுதல் முதலான பல துன்பங்களுக்குச் சதா பயந்து கொண்டே உயிர் வாழவேண்டியவர்களாயிருக்கின்றனர். ஹனோயின் ஆதரவு அதிகரித்துவருவதால் தென் வியட்நாமில் நடைபெறும் கம்யூனிஸ்ட் நடவடிக்கைகளும் நாளுக்கு நாள் உக்கிரமடைந்துவருகிறது.

வடவியட்னாமிலிருந்து பெருந்தொகையான வெடிமருந்துகள் கடல்மார்க்கமாக கொரில்லாக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வந்துள்ளன.

இவ்வாயுதங்களும் வெடிமருந்துகளும் கம்யூனிஸ்ட் சீனாவிலிருந்தே வந்துள்ளன, அவை சீனாவில் உற்பத்தி செய்யப்பட்டனவாயும் அல்லது மற்றைய கம்யூனிஸ்ட் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டனவாயும் இருக்கின்றது.

இரண்டு மாதங்களுக்குமுன் 32,000 வியட்காங் கொரில்லாக்கள் இருந்தமைக்கு மாறாக, இப்போது 35,000 வியட்கொங் கொரில்லாக்கள் அரசாங்கத்தின் தூண்டுதலால் நாசவேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வியட்காங்கின் பயங்கர நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன, பயமுறுத்தலால் வியட்காங் கொரில்லாக்கள் தங்கள் ஆட்பலத்தைப் பெருக்கி வருகின்றனர்" என்றும் அறிக்கை கூறுகிறது.

# சிரமதான உணர்ச்சி மறுமலர்ச்சியின் அறிகுறி

## வீதி திறப்பு வைபவத்தில் மாவட்ட அதிபர் பேச்சு

பருத்தித்துறை, வெள்ளி

"நமது தேவைகட்கு முழுவதாக அரசாங்கத்தை நம்பியிராது சுயமுயற்சியால் தனித்தும், ஒன்று சேர்ந்தும் நமது சக்திக்கேற்ப செயல்புரிய வேண்டும், வீதிகள் போன்ற பொதுத் தேவைகளை கிராம மக்கள் சிரமதான மூலம் நிறைவேற்றும் வழக்கம் அதிகரித்து வருவது சமுதாய மறுமலர்ச்சியைக் காட்டுகிறது. சமூக முன்னேற்றம் அச்சமூகத்தின் தேவைகளை உணர்ந்து ஒன்றுபட்டு உழைப்பதால் ஏற்பட முடியும்: அவசிய தேவையான 6000 ரூபா மதிப்பிடக் கூடிய இந்த வீதியை சிரமதான மூலம் நிறைவேற்றி வைத்த வாலிபர்களையும் கிராம வாசிகளையும் பாராட்டாதிருக்க முடியாது. அவர்களின் இந்த நல்ல பணி அயல் கிராமங்கட்கும் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளிக்குமென நம்புகின்றேன்."

இவ்வாறு யாழ், மாவட்ட அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா சந்தா தோட்டம் உத்திராவத்தைக்கு ஊடாக செல்லும் பாடசாலை வீதியைத் திறந்து வைத்து உரை நிகழ்த்துகையில் கூறினார்.

சந்தா தோட்டம் சனசமூக நிலையத்தில் இருந்து மாகாண அதிபர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

வடமராட்சிக் காரியாதிகாரி திரு. ஜே' டி. ஆர்னல்ட் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் சிரமதான மாவட்ட அதிபர் திரு. வி, பாலசுந்தரம் (ஆர். டி. ஓ), திரு. என். நவரத்தினராசா. புலோலி தெற்கு கிராமசேவையாளர் திரு. எஸ், ஜெகநாதன் முதலான பலர் சொற்பெருக்காற்றினர்.

கூட்ட ஆரம்பத்தில் நடைபெற்ற சிரமதானப் பணியில் அரசாங்க உத்தியோகத்தர்கள் உட்பட பல பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

# "சாத்வீக தெய்வ வழிபாடே பயன் தரத்தக்கது"

## மகாசிவராத்திரி விழாவில் பேச்சு

கிளிநொச்சி, வெள்ளி

உருத்திரபுரம் புராதன சிவாலயத்தில் சென்ற வருடங்களிலும் பார்க்க இவ்வருடம் மகாசிவராத்திரி சிறப்பாக நடைபெற்றது. நான்கு சாமங்களிலும் பூசை, அபிஷேகம், கூட்டுப்பிரார்த்தனை, வேத பாராயணம் என்பன நடைபெற்றன. வரணியூர் க. ஆறுமுகம் என்பவரின் கதாப்பிரசங்க அரங்கேற்றம் ஸ்ரீமத் வடிவேல்சாமியின் தலைமையில் நடைபெற்றது. தலைமையுரையில் சுவாமிகள் குறிப்பிட்டதாவது:-

"சிறு தெய்வ வழிபாடுகளிலும் பார்க்க சாத்வீக தெய்வ வழிபாடே மனிதனுக்கு பயன் தரக்கூடியதாகும். விநாயகர், சிவன், சுப்பிரமணியர்,விஷ்ணு சூரியன் முதலிய தெய்வங்களை வழிபடுதலே சாத்வீக தெய்வ வழிபாடாகும். இத்தகைய வழிபாட்டுத் தலங்களில் தெய்வ பக்தியை வளர்க்கும் வேதபாராயணம் திருமுறை முதலாய அருட்பாடல்களையன்றி வேறுபாடல்களையோ, இசைகளையோ ஆலயங்களில் இசைத்தா வண்ணம் கவனிக்க வேண்டியது மிக அவசியமானது. நாம் அனைவரும் இயல்பாகவே தெய்வீக அம்சமுடையவர்கள், தெள்ளியநீரை பாசி மறைப்பதுபோல் எங்கள் தெய்வீக இயல்பைஅறியாமை என்னும் பாசி மறைப்பதால் அதை உணர முடிவதில்லை அறியாமையை நீக்கியதும் எம்மிடத்தில் தெய்வீகம் ஒளி பெற்று பிரகாசிக்கக் காண்கின்றோம். இதற்காகவே ஆலயங்களுல் சாத்வீக வழிபாடுகளையும் விரத அனுஷ்டானங்களையும் ஆன்றோர் நியமித்து வைத்துள்ளனர்.

சிவாலயக்குரு சண்முகசுந்தரக்குருக்கள் ஸ்ரீ உருத்திரபாராயணம் செய்து அதன் விளக்கத்தையும் கூறினார். காரியதரிசி திரு. த. நல்லதம்பி, திரு. வை. கிருஷ்ணபிள்ளை எல். ஓ. ஆகியோர் ஆலய வளர்ச்சி பற்றி குறிப்புரை நிகழ்த்தினர்.

# ஹரிமன்—சாஸ்திரி

புதுடில்லி, மார்ச் 4

அமெரிக்க விசேஷத் தூதர் திரு. ஹரிமன் நேற்று பிரதம மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரியைச் சந்தித்துப் பேசினார்.

# ஜெர்மன் போர்க்கப்பல் இந்தியா வருகிறது

கீல், மார்ச் 6

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் முதன்முதலாக இப்பொழுதுதான் ஜெர்மன் போர்க்கப்பல் ஒன்று உலகச் சுற்றுப்பயணம் தொடங்கியிருக்கிறது. 'டாட்ஷிலண்டு' என்றழைக்கப்படும் 5400 டன் எடையுள்ள ஜெர்மன் போர் பயிற்சிக் கப்பல் சென்ற மாதம் 26ந் தேதியன்று உலகப் பயணம் தொடங்கியது. இதில் 533 பேர் இருக்கிறார்கள், தளபதி கால்மென் தலைமையிலான இக்கப்பல் ஜிப்ரால்டர், சூயஸ்கால்வாய், ஏடன் வழியாக வழியாகத் தென்னிந்தியாவிலுள்ள கொச்சித் துறைமுகத்திற்கு வரும். அங்கிருந்து கல்கத்தா சென்று மார்ச் 29ல் டோக்கியோ போய்ச்சேரும்; 106 நாட்களில் 28,860 மைல்கள் பயணம்செய்து 40 துறைமுகங்களுக்குச் சென்றுவிட்டு ஜூன் மாத இறுதியில் ஜெர்மனிக்குத் திரும்பும்.

# கந்தபுராணப் படிப்பு பூர்த்தி

சுழிபுரம், வெள்ளி

பொன்னாலை பிள்ளையார் கோவிலில் கடந்த மூன்று மாதங்களாக தொடர்ந்து படிக்கப்பட்டு வந்த கந்தபுராணப் படிப்பு இன்றுடன் முடிவடைந்தது. அபிஷேக ஆராதனைகளும், அன்னதானமும் நடைபெற்றது. தினமும் பல மக்கள் கலந்துகொண்டார்கள் கடந்த இரண்டு தினங்களாக திரு. பொன். முத்துக்குமாரன் பயன் சொல்லி வந்தார்கள்.

# சிவராத்திரி

உடுப்பிட்டி, வெள்ளி

நெல்லியடி மெதடிஸ்தமிஷன் கல்லூரியில் ஆசிரியர் திரு. சி. மயில்வாகனம் தலைமையில் சிவராத்திரி விழா கொண்டாடப்பட்டது. சிவராத்திரி மகிமை பற்றி ஆசிரியை செல்வி மனோன்மணி சொற்பொழிவாற்றினர். ஆசிரியர் திரு. எஸ். கிருஷ்ணர் 'விரதமும் நாமும்' என்பது பற்றி உரைநிகழ்த்தினர். மாணவர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.


# அருத எண்ணெய்

(அறுபதாம் பச்சையும்
வேறு 44 அரிய மூலிகைகளும் சேர்ந்தது)

கூந்தலை அடர்த்தியாகவும் நீளமாகவும் வளர்க்கும்.
தலைமயிர் உதிர்வதையும், நரைப்பதையும் தடுக்கும்.
பீனிசத்தை முற்றாக குணப்படுத்தும்.
மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்களுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். கண் எரிச்சல், காது இரைச்சல், காதில் சீழ் வடிதல், அடிக்கடி ஜலதோஷம் பிடித்தல், தும்மல், தலையிடி ஆகிய நோய்களைக் குணப்படுத்தும்.

சிறுவர் முதல் பெரியோர் வரை பாவிக்கலாம்

முழுப்போத்தல் ரூபா 10-00 அரைப்போத்தல் ரூபா 5-00
கால் போத்தல் ரூபா 3-00 2 அவு. போத்தல் ரூபா 1-00

எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்:
வைத்தியர் பி. எம். திசாநாயக்க,
கம்பளை.

சாவகச்சேரியில் கிடைக்குமிடம்:
ஸ்ரீ முருகன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ்,
பஸ் ஸ்டான்ட், சாவகச்சேரி.

யாழ்ப்பாணத்திற்கு ஏகவினியோகஸ்தர்கள்
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(தொலைபேசி: 541)

## வானொலி நிகழ்ச்சிகள்

### சனி 6-3-65

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-00 பக்திப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதம்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 செய்திச்சுருள், 7-00 இசைநாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 உரைச்சித்திரம், 10-00 நேயர் விருப்பம்.

### ஞாயிறு 7-3-65

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 7 00 பக்திப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 7-45 முஸ்லிம்பாடசாலை, 8-00 வேதப்பிரசங்கம், 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம்பாடசாலை, 9-30 திரைஇசை, 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 குதூகலம்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு, 5-45 திரைஇசை.

இரவு 6-10 நேயர்கடிதங்கள், 6-15 நாளவாத்தியக் கச்சேரி, 6-45 வீணை இசை, 7-00 பாட்டு, 7-30 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 8-15 மாணவர்மன்றம், 8-30 நேயர் விருப்பம், 9-15 மனைவிளக்கு—மாதர்நிகழ்ச்சி, 9-45 மாதர் விருப்பம், 10-15 சேர்ந்த இசை.

REGAL — JAFFNA
NOW SHOWING
ALEX NICOLL
in
GUNFIGHTERS OF CASA GRANDE
(Cinemascope - Metro Color)

ஸ்ரீ மனோகரா (யாழ்ப்பாணம் போன்: 485)
ஹொன்னப்பா பாகவதர்
பி. சரோஜாதேவி
நிறம்பட நடித்த
மஹாகவி காளிதாஸ்

## உடற்பயிற்சி போட்டி

பருத்தித்துறை, வெள்ளி

வடமராட்சிப் பகுதிப் பாடசாலைகளின் வருடாந்த உடற்பயிற்சிப் போட்டிகள் இம்மாதம் 8-ந் திகதி திங்களன்று நடைபெறவிருக்கின்றன.

பருத்தித்துறை வட்டாரப் பாடசாலைகளுக்கான போட்டிகள் அன்று காலை ஹாட்லிக் கல்லூரி விளையாட்டு அரங்கிலும் உடுப்பிட்டி வட்டார பாடசாலைகட்கான போட்டிகள் அன்று மாலை நெல்லியடி அரசினர் மத்திய மகாவித்தியாலயத்திலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளன கல்வி இலாகாவினால் நடாத்தப்படும் இப்போட்டிகட்கான ஏற்பாடுகளை வட்டார வித்தியாதரிசிகள் செய்து வருகின்றனர்.

இப்போட்டிகளில் தெரிவு செய்யப்படுவோர் மாவட்ட போட்டிகளில் கலந்துகொள்வர்.

## கொலைவழக்கு ஒத்திவைப்பு

சாவகச்சேரி, வெள்ளி

நாவற்காடுகொலை வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி திரு ரூபேர்ட் சில்வா முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபொழுது உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ரட்னுயக்கா சாட்சியமளித்தார் அவரை எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்தார். அதன்பின் நீதிபதி வழக்கை இம்மாதம் 8-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். அன்று எதிரிகளின் வழக்கறிஞர் தனது தொகுப்புரையை நிகழ்த்துவார்.

இவ்வழக்கில் நாவற்காட்டைச் சேர்ந்த கணபதியார் இராசையா என்ற இளைஞரைக் கொலை செய்ததாக அதே ஊரைச் சேர்ந்த ஐந்து பேர் மீது சாவகச்சேரி பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நைரோபி, மார்ச் 5

காங்கோ பிரதமர் திரு. ஷோம்பே நைரோபி வந்திருக்கிறார். ஆபிரிக்க ஐக்கிய சபை கூட்டத்தில் கலந்துகொள்ளும்பொருட்டு இவர் வந்திருக்கிறார்.

இப்பொழுது திரையிடப்படுகிறது!

ஜிங்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
ராஜ் (நீர்கொழும்பு) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)
கல்யாணி (காவலபிட்டி) மொடேர்ன் (பதுளை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் வெலிங்டனில்
தினசரி பி. ப. 6-30, 10-30. சனி, ஞாயிறு காலை 10-30, பி. ப. 2-30. 6-30. 10-00
ஜெமினி கணேசன்—சாவித்திரி (நடித்த)
கற்பகம்

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திரிக் கோட்டில் புலோலி மேற்கு முருகப்பர் பொன்னுச்சாமி கைம்பெண் வனசம்மா.

இல. 6570 வழக்காளி

1. பருத்தித்துறை தற்காலம் நல்லூர் ஆறுமுகம் வயிரமுத்து நடராசா.

2. வபண் சிவானந்தம்

மரணம் { 3. ஷெயூர் சின்னத்தம்பி கந்தையாவும்
4. பெண் இராசம்மா

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்கும் குறித்த கோட்டால் அனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படுமாதனம் 1965-ம் ஆண்டு சித்திரை மாதம் 3-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4மணிக்குகுறித்தகாணியிடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோயில் பற்று நல்லூர் இறை குஞ்சி கணடன வளவும் மறு பிரிவுகளும் சேந்து வந்தன வளவும் மறு பிரிவுகளும் நிரை 4 1/2 ஆனன் 1852-ம் ஆண்டு வைகாசி மீ 27-ந் திகதி உலாந்தா மேஸ்தர் வே. சிவரத்தினத்தினத்தால் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி நிரை 3 குளி 16 3/32 கல்விடுகள். சிணறு பயிர்களும் இன்னும் அதைச் சேர்ந்த வைகளும் எல்லை கிழக்கு ரோட்டு வடக்கு சின்னத்தம்பி கந்தையாவுக்குடைய வாதனம் மேற்கு பிரதம உடையார் கைம்பெண் நாகேஸ்வரிக்கும் மறு பேருக்குமுடையவாதனம் இவ்வெல்லைக்குட்பட்டவைகள் முழுவதும்.

தீர்வைத்தொகைரு, 35800/- இதில் ரூபா 25000/- க்கு 24-12-59 தொடக்கம் 8-3-61 வரை வட்டி ரூபா 2332/- மொத்தம்ரூபா 38132/- இதில் கொடுபட்ட தொகை 7000/- மிகுதி ரூபா 31132/- இதற்கு 5 வீத வட்டி ரூபா 4774/- மொத்தம் ரூபா 35406/- கொமிசன் செலவு உடன் செலுத்த வேண்டும்.

ஆ. சபாரத்தினம்

வடலி பாசி,
துப ஊர,
பருத்தித்துறை.
4-3-65. 1658

## ஈட்டு வழக்கு நொத்தீஸ்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

மானிப்பாய் தெற்கு ஜெயராசா கென்றி சைமன் இராசையா

வழக்காளி

NO. M B 6588 எதிராக

மானிப்பாய் வேலுப்பிள்ளை ஜெபேட் தம்பிராசா

எதிரி

திருமதி கிறேஸ் செல்வமணி சாமுவேல் அவர்களுக்கு C/o V. R. தம்பிராசா அவர்கள்

ஆலடி மானிப்பாய்

1949-ம் ஆ ஈட்டுச் சட்டத்தின் 9(1)/9(2) பிரிவின்படி பின்வருமாதனடாப்பில் நன்கு விபரிக்கப்படும். ஆதனத்தைப்பற்றிய மேற்படி வழக்கு தொடரப்பட்டிருக்கின்றது என்பதைப்பற்றி இதனால் உமக்கு அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

1964-ம் ஆ. ஆவணி மீ 25உ

(ஒப்பம்) S. P. தியாகராசா சக்கிடுத்தாருக்காக

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய்க் கோவிற் பற்று மானிப்பாயிறை வேடுவன் கண்டிவளவு உறுதிப்படி நிலப்பரப்பு 11 7/8 ஆறல்

## அரபுலீக் காரியதரிசி

பம்பாய், மார்ச் 5

பம்பாய் வந்திருக்கும் அரபுலீக் தலைமை காரியதரிசி திரு. ஹசோனவுக்கு இங்குள்ள அரபுமக்கள் சேர்ந்து விருந்தளித்துக் கௌரவித்தனர்

## வரணிக் கிராம சபை கேள்வி விளம்பரம்

1. ஒட்டுக்குளி ரோட்டு வேலை

2. மணிக்காவில் ரோட்டு வேலை.

3. தெங்கடிக் கிணறு வெட்டிக் கட்டல்.

மேற்படி வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் 25-3-65 காலை 10 மணி தொடக்கம் இக்காரியாலயத்தில் 1-ம் வேலைக்கு ரூபா 50/-ம் 2-ம் வேலைக்கு ரூபா 50/-ம், 3 ம் வேலைக்கு ரூபா 25/-ம் கட்டி பெற்றுக்கொள்ளலாம்.

2. பத்திரப்பணமாய் 1-ம் வேலைக்கும் 2-ம் வேலைக்கும் ரூபா 10/- வீதமும் 3-ம் வேலைக்கு ரூபா 5/-ம் செலுத்துதல் வேண்டும். இப்பணம் திருப்பித் தரப்படமாட்டாது.

3. கேள்விப் பத்திரங்கள் 27-3-65 காலை 10 மணிக்கு கிராமசபைக் காரியாலயத்தில் கிடைத்தல் வேண்டும், அதன் பிரதி அதேநேரம் வடபகுதி உள்ளூராட்சி உதவி அதிபருக்குக் கிடைத்தல் வேண்டும்

4. 1-ம் 5-ம் வேலைகட்கு ரூபா5000/-க்கு பதியப்பட்டவர்களிடமிருந்தும், 3-ம் வேலைக்கு ரூபா 2000/-க்கு பதியப்பட்டவர்களிடமிருந்து மாத்திரம் கேள்விகள் ஏற்கப்படும்.

க. ஆறுமுகம்,
அக்கிராசனர்.

வரணிக் கிராமசபை, வரணி,
சி. நா. இராசா,
இலிகிதர்.
3-3-65. 1655

## யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரி மாணவர் பகுதி

### பயிற்றப்பட்ட ஆசிரியருக்கு (ஆங்கிலம், தமிழ்)

மாலை வேளைப் போதனா வகுப்புகள்

வெளிவாரி மாணவர்களாக பதிவு செய்துகொள்ள பயிற்றப்பட்ட ஆசிரியர்கட்கு இலங்கைப் பல்கலைக்கழகம் அனுமதி கொடுத்துள்ளது.

1966-ம் ஆண்டுநடாத்தப்படும் பின்வரும் இலங்கைப் பல்கலைக்கழகப் பரீட்சைகட்கு வெளிவாரி உரிய போதனா வகுப்புகளை 1965-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஆரம்பமாகும் தவணை தொடக்கம் நடாத்த யாழ்ப்பாணக்கல்லூரி உத்தேசித்துள்ளது.

1. பொதுக்கலைத் தகுதி காண் பரீட்சை,

2. பொது விஞ்ஞானத் தகுதிகாண் பரீட்சை.

மாலை வேளைகளிலும் சனிக்கிழமைகளிலும் போதனா வகுப்புகள் நடாத்தப்படும். கல்லூரி பதிவாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்.

வட்டுக்கோட்டை,
20-2-65 1648

12-9-59 இல் மானிப்பாய் உத்தரவு பெற்ற உலாந்தா S. முத்துக்குமாரசாமி என்பவரால் 1445-ம் இலக்கத்தில் எடுத்த படத்தின்படி நிலப்பரப்பு பதினொன்று குளி எட்டு (நிலப்பரப்பு 11 குளி 8) செய்வண்டபயிர்களும் பனைகளும் கிழக்கெல்லைக்காணியின் தெற்கேயிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலுரித்தும் எல்லை கிழக்கு தற்போது அம்பிற இராசரத்தினத்துக்கும் பெண் தவராசலட்சுமிக்குமுரிய வாதனம் வடக்கு ரோட்டு மேற்கு தம்பிஐயா லோகநாதனுக்கும் K. கெங்காதரனுக்கும் மனைவிக்குமுரிய வாதனம் தெற்கு சுப்பிரமணியம் சோமசுந்தரம் பெண் செல்வராணியினதுவும் இதடங்கலும்,

1659

யாழ். குடிவகை ஸ்தாபனத்தாரின் மகத்தான
வெ... யீடு
விற்பனையாகிறது
அடைத்த போத்தல்
யாழ். தென்னங்கள்
உடலுக்கு உறுதியும்
மூளைக்கு நல்லுணர்வும்
தேக ஆரோக்கியத்திற்கும்
உகந்தது
அடைத்த போத்தல்
யாழ். தென்னங்கள்
சுப்பையா அன் கம்பெனி
(மேலைநாட்டுக் குடிவகை ஸ்தாபனம்)
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
வட்டுவாகல், முல்லைத்தீவு

சரி விளம்பரம்

### தேவை

எங்களுடைய "டயர்" ஸ்தாபனத்திற்கு ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்த ஒரு மனேஜர் தேவை, 7-3-65 க்கு முன் நேரில் சந்திக்கவும். நைனல் ரேணிங் வேக்ஸ், 103, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். 1763

### விற்பனைக்கு

எங்கள் தயாரிப்பிலுள்ள "டோச்" மார்க் அலுமினியப் பாத்திரங்கள் குறைந்த விலையில் எம்மிடம் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம்.

எவர்சில்வர் மாளிகை, 241, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 1748

EY 4138 தொடரிலக்கத்தின்ன ஹில்மன் காரும் EL 1437 இலக்கம் பொறித்த B S A மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு 95, அரசடி வீதி, வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம். 1757

திறமான பச்சைப்பெருமாள் விதைநெல் விற்பனைக்கு இருக்கின்றது. தேவைக்கு கீழ்க்கண்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம். மாப்பிலை இன்டஸ்றீஸ் வேக்ஸ், மானிப்பாய். 1749

நல்ல நிலைமையிலுள்ள 23 சீ 3436 இலக்க மொரிஸ்வானும், 83 சீறீ 1591 இலக்க பேபி பிரிக் வானும் விற்பனைக்குண்டு. விலாசம் சிங்கசிறி பேக்கறி, 304, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 1782

### தொய்வு, திரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியல் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும் தொய்வுக்கு 10 நாள் மருந்து. 12-50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10-50.

வைத்தியர் பரிபூரணைந்த கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## அதிக பிரயாணிகளை ஏற்றியதாக வழக்கு

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறை நீதிமன்றத்தில் கேற்று மேலதிக பிரயாணிகளை ஏற்றியதாக வாகனக்காரர்கள் மீது பொலிசார் குற்றம் சாட்டப்பட்ட முப்பது வழக்குகளுக்குமிகமான வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

பதில் நீதிபதி திரு. செ. இரத்தினசிங்கம் முன்னிலையில் இவ்வழக்குகள் நடைபெற்றன.

தம்பு விக்கிரமசிங்கம் என்பவருக்கு 14 வழக்குகளில மொத்தம் ரூபா 325ம், செ. நமசிவாயம் என்பவருக்கு 7 வழக்குகளில் மொத்தம் 99 ரூபாவும், சின்னமணி என்பவருக்கு 7 வழக்குகளில் 105 ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது.

# ராஜினுமா செய்க தமிழ்நாட்டு அரசாங்கத்துக்கு எதிர்க்கட்சிகள் கோரிக்கை

சென்னை, மார்ச் 4

**தமிழ்நாட்டு அரசாங்கம் ராஜினுமா செய்யவேண்டுமென்று இன்று நடைபெற்ற தமிழ்நாட்டு கீழ் சட்டசபைக் கூட்டத்தில் எதிர்க் கட்சியினர் கோரினர்.**

தமிழ்நாட்டு கீழ் சட்டசபையில் இன்று நடைபெற்ற பட்ஜட் விவாதத்தின்போது அண்மையில் இடம்பெற்ற ஹிந்தி எதிர்ப்பு கிளர்ச்சிகளுக்கு அரசாங்கமே முழுப்பொறுப்பு என்று எதிர்க்கட்சியினர் தெரிவித்தனர்.

மொழிக் கிளர்ச்சி சம்பந்தமாக அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு கண்டனம் தெரிவித்து எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் பலர் காரசாரமாக பேசினர்.

தமிழ்நாட்டு மந்திரிசபை ராஜினுமா செய்யவேண்டுமென்று எதிர்க்கட்சியினர் கோரினர்.

ஹிந்தி எதிர்ப்பு கிளர்ச்சிகளை சரியானமுறையில் அரசாங்கம் அடக்கிவிட்டது என்றும் மாணவர்கள் மீது டலாதகா ரம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறதென்றும் அங்கத்தினர்கள் குற்றம் சுமத்தினர்.

திராவிட முன்னேற்றக்கழக அங்கத்தவர் திரு. கிருஷ்ணமூர்த்தி பேசுகையில்; மாணவர்களின் அமைதியான ஊர்வலத்தைத் தொடர்ந்து நடைபெற்ற சகல சம்பவங்களுக்கும் முதன் மந்திரியே முழுப்பொறுப்பென்றும் கூறினர்.

## சகல தேசிய மொழிகளையும் ஆட்சி மொழிகளாக்குக

### ராஜ்ய சபாவில் அண்ணுதுரை

புதுடில்லி, மார்ச் 4

ராஜ்யசபாவில் இன்று தி. மு. க. தலைவர் திரு. வி. என். அண்ணுதுரை பேசுகையில்; இந்தியாவின் சகல தேசிய மொழிகளையும் உத்தியோக மொழிகளாக்கவேண்டும் என்றும் அதுவரை ஆங்கிலம் இந்தியாவின் ஆட்சிமொழியாக நீடிக்கவேண்டும் என்றும் கூறினர்.

"மொழிப் பிரச்னைக்குத் தீர்வுகாணபதற்குஇதுவேதக்க நேரமாகும். இப்பிரச்னையைச் சுமுகமாகத் தீர்த்து தென்னாட்டு மக்களின் அச்சத்தைப் போக்குவதற்கு மத்திய அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும், பல கட்சிகளுடனும் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி இப்பிரச்னையைத் தீர்க்கலாம்." என்றும் திரு. அண்ணுதுரை கூறினர்.

ஜனசங்க உறுப்பினர் திரு. ராஜ்பாயி பேசுகையில் அண்ணுதுரையின் யோசனையைத்தாம் வரவேற்பதாகவும் மக்களின் உணர்ச்சிகளை அரசாங்கம் உணரவேண்டும் என்றும் கூறினர்.

சகல மொழிகளுக்கும் அரசாங்கம் கௌரவம் அளிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## லெஸ்லியின் சவால்

பம்பலப்பிட்டி, வியாழன்

'மார்க்ஸீயவாதிகள் பௌத்த மதத்தை சிதைத்து விடுவார்களென யு. என். பி. யினர் மக்களிடையே பிரசாரம் செய்து வருகின்றனர். அரசாங்கத்தில் சேர்ந்தபின் நாம் பௌத்த மதத்துக்கு எதிராக நடந்து கொண்டிருக்கிறேமா என நான் கேட்க விரும்புகின்றேன். இதுசம்பந்தமாக நான் யாருடனும் சவால்விடத் தயாராக இருக்கின்றேன்.'

இவ்வாறு சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த திரு. லெஸ்லி குணவர்த்தன கொழும்பு மத்திய தொகுதியில் போட்டியிடும் அபேட்சகரான திரு. பீட்டர் கெனமனை ஆதரித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

## திருமதி லொரேனி ஜப்பான் தூதராகலாம்

பம்பலப்பிட்டி, வியா.

தற்போது கானுவில் இலங்கை ஸ்தானிகராகக் கடமையாற்றிவரும் திருமதி லொரேனி ஜப்பானில் இலங்கை ஸ்தானிகராக நியமிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. சேர் சுசந்தா டி' பொன்சேகா காலமானதைத் தொடர்ந்து ஜப்பானில் இலங்கை ஸ்தானிகர்பதவி காலியாகவுள்ளது.

## நூடான அரசியல் விவாதம்

சுழிபுரம், வெள்ளி

இப்பகுதியில் தேநீர் கடைகள், வாசிகசாலைகள், பொது மன்றங்கள் ஆகிய இடங்களில் இங்கே அரசியல் பேசாதீர்கள் என்ற வார்த்தைகள் எழுதப்பட்ட போர்ட்டுகள் தொங்கவிடப்பட்டுள்ளன. பொதுத் தேர்தல் நெருங்க நெருங்க கட்சி அனுதாபிகளுக்கிடையே பேச்சுகளில் சூடு அதிகம் காணப்படுகிறது. சித்தங்கேணி வாசிகசாலையில் தேர்தல் சம்பந்தமான பேச்சுகள் நடைபெற்ற போது இருவருக்குள் கைகலப்பு ஏற்பட நேர்ந்தபோது பக்கத்தே நின்றவர்களால் தக்க தருணத்தில தீர்க்கப்பட்டது. வழக்கம்பரையில் உள்ள தேநீர் கடை ஒன்றில் இருவர் சோடா போத்தல்களை தூக்கி ஒருவரை ஒருவர் அடிக்கமுறபட்டதுட்பட பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன.

## காரைநகர் சிவன் கோவில் உற்சவம்

யாழ்ப்பாணம், சனி

ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோவில் மகோற்சவம் இம்மாதம் 8-ம் திகதி ஆரம்பமாகிறது. 16-ம் திகதி ரதோற்சவமும் அடுத்த நாள் தீர்த்தோற்சவமும்நடைபெறும் 18-ந் திகதி நடைபெறும் திருக்கல்யாணத்துடன் மகோற்சவம் நிறைவுறும்.

## அமெரிக்காவில் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லொன்றும் தயாரிக்க அவர் திட்டமிட்டுள்ளார். இலங்கைக்கு சுற்றுப்பிரயாணஞ்செல்ல அமெரிக்க பொதுமக்கள் வர்த்தகர்கள், கல்விமான்கள் மாணவர்கள் முதலியோர்களை தூண்டுவதற்காகவேதாம் இப்படத்தைத் தயாரித்ததாக இங்கு அளித்த பேட்டியொன்றில் திரு. கேர்சல் கூறினர்.

இப்படத்தின் ஒவ்வொரு காட்சிக்கும் 100 முதல் 2500 பேர்வரை வருவரென அவர் எதிர்பார்க்கிருர். வாழ்க்கையின் சகல துறைகளிலும் இலங்கை மக்கள் சிநேகபூர்வமாகவும் ஒத்துழைப்பு உணர்ச்சியுடனும நடந்து கொள்ளுகின்றனர் என்று புகழ்மாலை சூட்டியன்ன திரு. கேர்சல் இலங்கையில் தாம் இப்புகைப்படங்களை எடுக்கையில் தம்மை ஒருவர் படமெடுக்கிருர் என எவரும் கவனிக்காதவாறு நடந்து கொண்டதாக கூறினர். இதனுல், இலங்கையின் உண்மையான நிலையினைத் தாம் படமெடுத்துள்ளதாக அவர் கருதுகிருர்.

முக்கியமாக கொழும்பில் துறைமுகக்காட்சிகள், இந்துக் கோவில்கள், முஸ்லிம் பள்ளிவாசல்கள், கிறிஸ்தவத் தேவாலயங்கள், மரங்கள் தோட்டங்கள், கோட்டைகள், கல்கிஸை நீர்கொழும்பு கடற்கரைக் காட்சிகள் முதலியதற்றை இவரது திரைப்படத்திற் காணலாம்.

கடற்கரை வாழ்க்கையின் மனோரம்மியமான காட்சிகளையும் இவர் திரைப்படமாக்கியுள்ளார். தேசிய வனங்களிலுள்ள மிருக வாழ்க்கையையும் படமாக்கியுள்ளார். புஸல்லாவை தேயிலைத்தோட்டங்களில் கிளப், ஸ்டோர்ஸ, ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள், வீடுகள் முதலியவற்றில் நடைபெறும் வாழ்க்கை விநோதங்களையும் அவர் இத்திரைப்படத்தில் புகுத்தியுள்ளார்.

இரத்தினபுரியிலுள்ள இரத்தினக் சுரங்கக்காட்சிகள், அநுராதபுரியிலுள்ள பொலநறுவை அழிபாடுகள், சிகிரியாக்குகை, கண்டிப்பெரஹரா முதலியவற்றை அமெரிக்கர்கள் விசேட ஆவலுடன் கண்டுகளிப்பரென அவர் கருதுகிருர்.

இவரும் இவரது பாரியாரும் 1958-ல் தெற்கு, தென் கிழக்காசிய நாடுகளில் ஒரு வருடத்தைக் கழித்தனர். இலங்கை, இந்தியா, ஆப்கானிஸ்தான், சிக்கிம் முதலிய நாடுகளுக்கும் இவர்கள் விஜயஞ் செய்தனர். சிக்கிம் பற்றிய இவரது சலனப்படம் இவரது புகழ்பெற்ற மற்றும் அநேக திரைப்படங்களுள் ஒன்ருகும்.

### கொழும்புத்துறை
(5-ம் வட்டாரம்)

திரு. ஜி. ஜி பொன்னம்பலத்தை ஆதரித்து கொழும்புத்துறை வீதியின் 101-ம் இலக்க வளவில் இன்று மாலை 5 மணிக்கு திரு. இ. பொன்னம்பலம் (மலாயன் பென்ஷனியர்) தலைமையில் நடைபெறும்.

## ஈழநாடு சூருவளி கஷ்ட நிவாரண நிதி

### உதவிகள் பெற்ருேர் விபரம்

சூருவளியினுல் தங்கள் தலைவர்களை இழந்த சில குடும்பங்களுக்கு ஈழநாடு சூருவளி கஷ்ட நிவாரண நிதிச்சபையினரால் 4-3-65 அன்று காசுக் கட்டளை மூலம் பணம் கொடுக்கப்பட்டது, விபரம பின்வருமாறு-

திருமதி நா. கற்பகமணி மயிலிட்டி-45 ரூபா.

திருமதி பா. ஜெயராணி சாவகச்சேரி-25 ரூபா.

இதுவரை ஈழநாடு சூருவளி கஷ்டநிவாரணநிதிக்குப் பணமாகவும்பொருளாகவும் 26,790 ரூபா 21 சதம் சேர்ந்துள்ளது.

## ஒருலட்சம் குடும்பங்கள் பாதிப்பு

### வரட்சி காரணம்

பம்பலப்பிட்டி, வெள்ளி

இம்முறை வரட்சிப் பிரதேசங்களில் பயிர்ச்செய்கை பொய்த்ததால் சுமார் ஒருலட்சம் குடும்பங்கள் பாதிக்கப்படலாமெனக் கருதப்படுகின்றது.

இதுபற்றிச் சமூகசேவை கலாசார விவகார அமைச்சர் அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளார்.

இவ்விதம் கஷ்டமுறும் குடும்பங்களுக்கு உதவுமுகமாக ஒவ்வொரு மாதமும் 30 லட்சம் ரூபா தேவைப்படுமென அமைச்சர் கூறியுள்ளார்.

## கமவரி நிறுத்தம்

பளை, வெள்ளி

கடந்த வருடங்களில் பயிர்ச்செய்கைக்கு அறவிட்டுவந்த கமவரி இவ்வருடம் நிறுத்தப்பட்டுள்ளது ஏழை விவசாயிகளின் வயல் நிலங்களில் இவ்வருடம் ஏற்பட்ட சூருவளிக்குப் பின் நிலவிய வரட்சியால் நெற்பயிர்கள் எரிந்து அழிந்தொழிந்தன. இதன் காரணமாக விவசாயிகள் தம்மால் வரி கட்ட முடியாதென கமக்குழுவிடம் சமர்ப்பித்த விண்ணப்பங்களின் பயனுக இன்று யாழ்ப்பாண விவசாய மாவட்ட அதிபரால் அண்மையில் இச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனுல் ஏழை விவசாயிகள் இதனின்றும் பிழைத்துக்கொண்டனர்.

## ஐ. ஜி. பி.யின் உத்தரவு

பம்பலப்பிட்டி, வெள்ளி

நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா, தேர்தல் தினத்தன்று வாக்காளர்களை ஏற்றிச் செல்லும் கார்கள் மீதும் மற்ற தனியார் வாகனங்கள் மீதும் கற்களை வீசுமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொண்டதாகக் கூறப்படும் சகல கூட்டங்கள் பற்றிய அறிக்கைகளையும் தமக்கு சமர்ப்பிக்குமாறு பொலிஸ இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு எஸ். ஏ. திஸாநாயகா பலமாகாணங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்தல் செய்துள்ளார்.

## சிவராத்திரி விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

சென்ற திங்கட்கிழமைமாலை 5 மணி தொடக்கம் விடியற்காலை 5 மணிவரை சிவராத்திரிதினம் வயாவிளான்பிள்ளையார் கோவிலில் கொண்டாடப்பட்டது. பலாலி தெற்கு இந்துசமயவிருத்திச் சங்கத்தினர் இதற்கான விசேஷ ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு கூட்டுப்பிரார்த்தனையும் சமய சொற்பொழிவுகளும் சமயப் பேச்சுப் போட்டிகளும் நடைபெற்றன.

## 8-ம் திகதி கல்லூரிகள் திறப்பு

சென்னை, மார்ச் 5

வருகிற 8-ம் திகதி தமிழ் நாட்டில் கல்லூரிகள் திறக்கப்படும் என்றும், வருகிற 10-ம் திகதி சட்டக்கல்லூரி திறக்கப்படும் என்றும் முதல் மந்திரி திரு. பக்தவத்சலம் அறிவித்தார். ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகாரணமாக இவைகள் மூடப்பட்டிருந்தன.

## இராமேஸ்வரத்துக்கு சாலைப்பாலம

சென்னை, மார்ச் 5

மண்டபத்திலிருந்து இராமேஸ்வரத்திற்கு சாலைப்பாலம் அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது பாம்பன் பாலம் வழியாக இந்த சாலைப்பாலமும் செல்லும்

## 36 இந்தியர் மாண்டனர்

புதுடில்லி. மார்ச் 5

கடந்த ஜனவரி 31-ம் திகதி வரை ஒருஆண்டுக் காலத்தில் ஜம்மு காஷ்மீரில் பாகிஸ்தான் துருப்புக்கள் 90 தாக்குதல்களை நடத்தின என்றும், இதில் 36 இந்தியர்கள் மாண்டதாயும், 1 பெண் உட்பட 10 பேர் காயமடைந்ததாயும், ஒருவர் கடத்தப்பட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

## 23,50,000 பேர் பார்த்தனர்

கொழும்பு, வெள்ளி

கொழும்பு கைத்தொழில் பொருட்காட்சியில் சகல வெளிநாட்டு மண்டபங்களும் திறக்கப்பட்டிருக்கின்றன இதுவரை 23,50,000 பேர் பொருட்காட்சியைப் பார்வையிட்டிருக்கிருர்கள்;

## வீரபத்திரர் உற்சவம்

பருத்தித்துறை, வெள்ளி

அல்வாய் வடக்கு வீரபத்திரர் ஆலய வருடாந்த உற்சவங்கள் இம்மாதம் 8-ந் திகதியன்று ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்களுக்கு நடைபெறவிருக்கிறது.

15-ந் திகதி தேர்த்திருவிழாவும் 17-ந் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## பஸ் சேவை திருப்தி இல்லை

யாழ்ப்பாணம், வெள்ளி

இடைக்காடு, தொண்டமனறு, வரிக்காடு, பருத்தித்துறை பஸசேவை கடந்த சில மாதங்களாக பஸ இல்லாத காரணத்தால் பிரயாணிகள் மிக கஷ்டப்படுகிருர்கள் என்றும் பருத்தித்துறை இ. போ. ச. டிபபோவால் இயங்கும் சேவை திருப்திகரமாக இல்லை என்றும் அறிவிக்கப்படுகிறது.

## 'தேசத்துரோகத்தை நாம் எதிர்ப்போம்'

பம்பலப்பிட்டி, வெள்ளி

எந்த ஒரு அந்நிய வல்லரசுக்கும் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகச் செயலையும் நாம் எதிர்ப்போம். அது மேற்கு ஏகாதிபத்தியவாதிகளாக இருக்கலாம் அல்லது ரஷ்ய, சீன ஏகாதிபத்தியவாதிகளாக இருக்கலாம் என எம் ஈ பி தலைவர் திரு பிலிப் குணவர்த்தன கொழும்பு மத்திய தொகுதியில் எம் ஈ பி சார்பில் போட்டியிடும் திரு. டி ஏ பியதாசாவை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு பிலிப் மேலும் பேசுகையில் முன்னை நாட்களில் பிரபுக்கள் நாட்டைக்காட்டிக்கொடுத்தார்கள். இப்போதும் அவர்களைப் போன்றவர்கள் சீன கம்யூனிஸ்டுகளுக்கு நாட்டைக் காட்டிக் கொடுப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிருர்கள் என்ருர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.